செ.வெ.எண்.1039 REVISED நாள்.25.11.2010

**பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை**

செய்தி வெளியீடு

மாண்புமிகு கலைஞர் அவர்கள் நல்லாட்சியில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களால் ஆரம்ப சுகாதாரப்பணிகளில் தமிழகம் இந்திய திருநாட்டிலேயே முதலிடம் வகித்து வருகிறது. பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக, தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வந்த, 116 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு கலைஞர் அவர்களால் கடந்த ஆண்டில் தொடங்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நவீன வசதிகளுடன் கூடிய 257 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகளுடன் கூடுதல் பணியாளர்களுடன் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு பதவியேற்ற கடந்த நாலரை ஆண்டுகளில் 6810 மருத்துவர்கள் நியமனம் ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நவீன கருவிகளான செமி ஆட்டோன அனலைசர்கள், ஸ்கேன் கருவிகள், அவசர ஊர்திகள், கர்ப்பிணிகளுக்கு இலவச மதிய உணவு, வரு முன்காப்போம் திட்ட முகாம்களில் சிறப்பு மருத்துவ பரிசோதனைகள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், கலைஞர் காப்பீட்டு திட்டம் போன்ற புகழ் வாய்ந்த திட்டங்களால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் சுகாதார திட்டப்பலன்களை பெற்று பயனடையும் நிலை உருவாகியுள்ளது. தனியார் + அரசு கூட்டு முயற்சியிலும் வெற்றிகரமான பல நல்வாழ்வு திட்டங்களை தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில் செம்மஞ்சேரியில் ரூ.2.67 கோடி மதிப்பிட்டில் டைம்ஸ் பவுண்டேசன் உதவியுடன் 30 படுக்கை வசதியுடன் கூடிய தரமுயர்தப்பட்டுள்ளது. ஏற்கனவே மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் தனியார் + அரசு கூட்டுமுயற்சி திட்டத்தின் கீழ் சிறப்புற செயல்பட்டு வருகிறது, மாநில தலைநகரான சென்னையில் வாழும் புறநகர் மக்களுக்கு செம்மஞ்சேரி, மேடவாக்கம் போன்ற நவீன தரமுயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு கலைஞர் அவர்களின் அரசு வழங்கிய மகத்தான சுகாதார சேவையாகும். செம்மஞ்சேரி நவீன தரமுயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.11.2010 அன்று மாலை தொடங்கி வைத்து விழாப்பேருரை

நிகழ்த்துவார்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் விழா தலைமை வகித்து சிறப்புரை ஆற்றுகிறார்கள் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ச.இராஜேந்திரன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.இராஜா, மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் திரு.வி.கு.சுப்புராஜ், மாநில நல்வாழ்வு சங்க குழும இயக்குநர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன், பொது சுகாதாரத்துறை இயக்குநர் மரு.ஆர்.டி.பொற்கைப்பாண்டியன் ஆகியோர் விழாவில் பங்கேற்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்ட துணை இயக்குநர் மரு.க.இராஜசேகர் அவர்கள் நன்றி உரை நிகழ்த்துகிறார்.

25/11/10
இயக்குநர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9